| Roll No. | | | | | | | | | | | | Serial No. of Q. C. A. B. |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|

ಒಟ್ಟು ಪ್ರಶ್ನೆಗಳ ಸಂಖ್ಯೆ : 63 ] [ ಒಟ್ಟು ಮುದ್ರಿತ ಪುಟಗಳ ಸಂಖ್ಯೆ : 24

Total No. of Questions : 63 ] [ Total No. of Printed Pages : 24

**ಸಂಕೇತ ಸಂಖ್ಯೆ : 10-T** **ವಿಷಯ : ಪ್ರಥಮ ಭಾಷೆ — ತಮಿಳು**

**Code No. : 10-T** **Subject : First Language — TAMIL**

ದಿನಾಂಕ : 28. 03. 2014 ] [ Date : 28. 03. 2014

ಸಮಯ : ಬೆಳಿಗ್ಗೆ 9-30 ರಿಂದ ಮಧ್ಯಾಹ್ನ 12-45 ರವರೆಗೆ ] [ Time : 9-30 A.M. to 12-45 P.M.

ಪರಮಾವಧಿ ಅಂಕಗಳು : 125 ] [ Max. Marks : 125

**FOR OFFICE USE ONLY**

| Q. No. | Marks | Q. No. | Marks | Q. No. | Marks | Q. No. | Marks | Q. No. | Marks |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1. | | 14. | | 27. | | 40. | | 53. | |
| 2. | | 15. | | 28. | | 41. | | 54. | |
| 3. | | 16. | | 29. | | 42. | | 55. | |
| 4. | | 17. | | 30. | | 43. | | 56. | |
| 5. | | 18. | | 31. | | 44. | | 57. | |
| 6. | | 19. | | 32. | | 45. | | 58. | |
| 7. | | 20. | | 33. | | 46. | | 59. | |
| 8. | | 21. | | 34. | | 47. | | 60. | |
| 9. | | 22. | | 35. | | 48. | | 61. | |
| 10. | | 23. | | 36. | | 49. | | 62. | |
| 11. | | 24. | | 37. | | 50. | | 63. | |
| 12. | | 25. | | 38. | | 51. | | × | |
| 13. | | 26. | | 39. | | 52. | | × | |
| | | | | | | | | ***Total Marks*** | |

| **Total Marks in words** | | | **Grand Total** | |
|---|---|---|---|---|
| 1. ✓ | | | | |
| 2. ✓ | | ✓ | ✓ | |
| *Signature of Evaluators* | *Registration No.* | *Signature of the Deputy Chief* | *Signature of the Room Invigilator* | |

[ Turn over

*மாணவர் கவனத்திற்கு :*

i) இது வினாத்தாளுடன் கூடிய விடைத்தாள்.

ii) ஒவ்வொரு வினாவிற்கும் விடையளிக்கத் தேவையான இடம் கொடுக்கப்பட்டுள்ளது. கொடுக்கப்பட்டுள்ள அளவின்படியே விடைகளை எழுதவும்.

iii) இந்த வினாத்தாள் 'பொருத்துக' பிரிவையும் சேர்த்து மொத்தம் 63 வினாக்களைக் கொண்டுள்ளது.

iv) மாணாக்கர்கள் விடைகளை பென்சிலால் எழுதக்கூடாது. பென்சிலால் எழுதிய விடைகள் மதிப்பிடப்படமாட்டாது.

v) மாணாக்கர்களுக்கு வினாத்தாளைப் படிப்பதற்கென 15 நிமிடங்கள் கூடுதலாக தரப்பட்டுள்ளது.

கீழ்வரும் ஒவ்வொரு வினாவிற்கும் / முழுமைபெறாத கூற்றுகளுக்கும் ( Incomplete statements ) நான்கு மாற்று விடைகள் தரப்பட்டுள்ளன. மிகச் சரியான விடை என்று நீங்கள் கருதுபவற்றைத் தேர்ந்தெடுத்து அதன் கீழ் உள்ள விடைப் பகுதியில் விடையை குறியீட்டுடன் முழுவதுமாக எழுதவும் : $15 \times 1 = 15$

1. கம்பராமாயணம் குறிப்பிடும் 'அலகிலா விளையாட்டுடையவர்' யார் ?
   (A) கம்பர்
   (B) கவிநாயகர்
   (C) கடவுள்
   (D) காளமேகம்.

   *விடை :* __________

2. ''நானும் நீயும் வேறிடத்திருக்க வேண்டும்'' என்றவர்
   (A) சேக்கிழார்
   (B) முத்தநாதன்
   (C) சேதிமன்னன்
   (D) மணிமேகலை.

   *விடை :* __________

3. பதினெண்கீழ்க் கணக்கு நூல்களுள் ஒன்று
   (A) பழமொழி நானூறு
   (B) சூளாமணி
   (C) மணிமேகலை
   (D) மனோன்மணீயம்.

   *விடை :* __________

4. வங்கம் - இதன் பொருள்

(A) தீவு

(B) கப்பல்

(C) மலை

(D) யானை.

*விடை :* ______________________

5. ஆபுத்திரனுக்கு உதவிய தெய்வம்

(A) தீவதிலகை

(B) மணிமேகலா

(C) சுதமதி

(D) சிந்தா விளக்கு.

*விடை :* ______________________

6. ''போக வேண்டுமென ஏன் பறக்கின்றீர் ?'' என்று ஆனந்தரங்கப் பிள்ளை யாரை நோக்கிக் கேட்டார் ?

(A) சீனிவாச கவி

(B) ஜவ்வாதுப் புலவர்

(C) இராமகவிராயர்

(D) மதுர கவிராயர்.

*விடை :* ______________________

7. ''அதற்கு இங்கு சௌகரியப்பட மாட்டாது'' என்றவர்

(A) அந்தணர்

(B) மனைவி

(C) மாணாக்கர்

(D) வேலைக்காரர்.

*விடை :* ______________________

8. பஜாஜ் ஜானகி தேவி விருது பெற்றவர்

(A) திம்மக்கா

(B) சுமித்ரா

(C) அஞ்சுபாபி

(D) சின்னப்பிள்ளை.

விடை : ______________________

9. ''ஐயோ ! மரங்களை வெட்டுவதா ? நினைத்துக் கூடப் பார்க்க முடியவில்லை'' - என்றவர்

(A) செர்டகாப்

(B) டால்ஸ்டாய்

(C) சோபியா

(D) எட்வின்.

விடை : ______________________

10. ஏவுகணையின் தீயை அணைக்கப் பயன்படும் நீர்மம்

(A) நைட்ரஜன்

(B) கார்பன் மோனாக்ஸைடு

(C) ஹைட்ரஜன்

(D) கார்பன் டை ஆக்ஸைடு.

விடை : ______________________

11. மூன்று சீர்களை உடைய அடி

(A) அளவடி

(B) சிந்தடி

(C) குறளடி

(D) நேரடி.

விடை : ______________________

12. இரட்டைக் கிளவியை எடுத்துக்காட்டுக

(A) பலப் பல

(B) விடு விடு

(C) நட நட

(D) பள பள.

*விடை :* ______________________

13. 'தாமரை முகம்' - இது என்ன தொகை ?

(A) உவமைத்தொகை

(B) உம்மைத்தொகை

(C) வேற்றுமைத்தொகை

(D) பண்புத்தொகை.

*விடை :* ______________________

14. உடம்படு மெய்கள் எவை ?

(A) ய் ம்

(B) ய் வ்

(C) ப் வ்

(D) வ் ம்.

*விடை :* ______________________

15. உலகில் இருக்கும் மக்கள் எவ்வாறு வாழ வேண்டும் ?

(A) உண்டு

(B) உறங்கி

(C) வருந்தி

(D) உழைத்து.

*விடை :* ______________________

கோடிட்ட இடங்களைத் தகுந்த விடைகளால் நிறைவு செய்க : 5 × 1 = 5

16. .................... பிணியின்றி வாழ்தல் இனிது.

17. யானையை அடக்கும் கருவி .................... .

18. ஆடலும், பாடலும் இணைந்த கூத்தினை .................... என்பர்.

19. மனோன்மணிக்கேற்ற மணவாளன் .................... .

20. சீவலமங்கைத் தென்கரை நாட்டில் காயக் கண்டது .................... .

21. பொருத்துக : 5 × 1 = 5

| | |
|---|---|
| (a) புறநானூறு | i) தேசிக விநாயகம் பிள்ளை |
| (b) புரட்சிக் கவி | ii) கங்கை |
| (c) கவிமணி | iii) எட்டுத்தொகை |
| (d) ஆழி | iv) சுந்தரம் பிள்ளை |
| (e) வானதி | v) கடல் |
| | vi) பாவேந்தர். |

*விடைகள் :*

a) ______________________________

b) ______________________________

c) ______________________________

d) ______________________________

e) ______________________________

பின்வரும் ஒவ்வொரு வினாவிற்கும் ***ஒரு*** வாக்கியத்தில் விடை தருக : $10 \times 1 = 10$

22. ‘பசும்புல் தலை காண் பரிது’ எப்போது ?

23. ஐம்பெருங்காப்பியங்கள் யாவை ?

24. பறவைகள் எவ்வாறு இறைவனைத் துதிக்கின்றன ?

25. செல்லமழை பெய்ததும் பெண்கள் என்ன செய்தனர் ?

26. உலக இன்னல்களுக்கெல்லாம் காரணம் யாது ?

27. ஆனந்தரங்கப் பிள்ளையினிடத்து லெனுவார் எங்ஙனம் அன்பு காட்டினார் ?

28. வினையாலணையும் பெயர் என்றால் என்ன ?

29. எதுகை என்றால் என்ன ?

30. ஆபுத்திரன் பெற்ற பாத்திரத்தின் சிறப்பு யாது ?

31. யக்ஷகான பாத்திரங்கள் மேடைக்கு வரும் மரபு யாது ?

பின்வரும் ஒவ்வொரு வினாவிற்கும் ***மூன்று*** வாக்கியங்களில் விடை தருக : $15 \times 2 = 30$

32. குணங்குடி மஸ்தான் இறைவனை நோக்கி இயம்புவது யாது ?

33. நாய்பெற்ற தெங்கம்பழம் யாது ? விளக்குக.

34. சோழனின் யானை நாணிப் புறங்கடை நின்றது ஏன் ?

35. இளமைப்பருவத்தின் மகத்துவம் குறித்து கவிஞர் சிற்பி கூறுவன யாவை ?

36. துய்ப்ளே ஆனந்தரங்கப் பிள்ளையைப் பாராட்டிக் கூறிய மொழிகள் யாவை ?

37. அந்தணர் தன் மனைவியிடம் மகிழ்ந்து கூறியன யாவை ?

38. அஞ்சு அனைவருக்கும் கூறுவது என்ன ?

39. சான்பிரான்சிஸ்கோவிலிருந்து லாஸ்ஏஞ்சல்ஸ் செல்லும் வழியில் காணக்கிடைக்கும் காட்சிகள் யாவை ?

40. இறைவனை வாழ்த்தாத தன் மனத்தை நோக்கி மாயூரம் வேதநாயகம் பிள்ளை கூறுவன யாவை ?

41. விடியற்காலக் காட்சியை சுந்தரம் பிள்ளை எவ்வாறு கற்பனை செய்கிறார் ?

42. பிறிதுமொழிதல் அணி என்றால் என்ன ? எடுத்துக்காட்டு தருக.

43. உரிச்சொல் என்றால் என்ன ? அதன் வகைகள் யாவை ?

44. மரபு என்றால் என்ன ?

45. ஒற்றளபெடை என்றால் என்ன ? எடுத்துக்காட்டு தருக.

46. தீயவழியில் செல்வம் ஈட்டியவர் எவ்வாறு துன்புறுவர் ?

பின்வரும் ஒவ்வொரு வினாவிற்கும் ***ஐந்து*** வாக்கியங்களில் விடை தருக :

4 × 3 = 12

47. தோல் பொம்மைகளின் அமைப்பையும் செயலையும் விவரி.

*அல்லது*

மனோன்மணீயத்தின் கதைச் சுருக்கத்தை வரைக.

48. ஆனந்தரங்கப் பிள்ளை காலத்தில் நடந்த திருமண நிகழ்ச்சியை வரைக.

*அல்லது*

திருக்குறள் உலகப் பேரறிஞர்களின் பாராட்டைப் பெற்றுள்ளமையை விவரி.

49. அடுக்குத்தொடருக்கும், இரட்டைக் கிளவிக்கும் உள்ள வேறுபாட்டை எழுதுக.

*அல்லது*

உயிரளபெடை என்றால் என்ன ? வகைகளைக் குறிப்பிடு.

50. வஞ்சப்புகழ்ச்சி அணியை விளக்கி எடுத்துக்காட்டு தருக.

*அல்லது*

வெண்பாவின் பொது இலக்கணத்தை வரைக.

*குறிப்பு :* பின்வரும் வினாக்களுக்கு இடம் சுட்டிப்பொருள் விளக்குக : 5 × 3 = 15

51. ''இது பொறுப்பதில்லை தம்பி, எரிதழல் கொண்டு வா''

52. ''எங்களில் ஒருவருக்குக் கூடச் சொந்தமாக வீடு இல்லை''

53. ''மணிப்புறாவா ? மாடப்புறாவா ?''

54. ''நான் என்ன புண்ணியம் செய்தேனோ !''

55. ''நல்ல தீர்ப்பு கிடைக்கும் என்ற நம்பிக்கை எனக்கு இல்லை''

56. கீழ்க்காணும் பழமொழிகளுள் ஒன்றை மட்டும் விளக்குக. 1 × 3 = 3

அ) சிறுதுளி பெருவெள்ளம்.

ஆ) யானைக்கும் அடி சறுக்கும்.

இ) அகத்தின் அழகு முகத்தில் தெரியும்.

அடிபிறழாமல் எழுதுக : 1 × 4 = 4

57. ''நாடா கொன்றோ... '' எனவரும் பாடல்

*அல்லது*

''மலைகளிலே உயர்மலையை ... என வரும் பாடல்''

பின்வரும் ஒவ்வொரு வினாவிற்கும் ***எட்டு*** வாக்கியங்களில் விடை தருக : $3 \times 4 = 12$

58. சுத்தானந்த பாரதியார் தமிழன்னையை எவ்வாறு போற்றுகிறார் ?

*அல்லது*

அமைதிப்புறாவின் ஆசைகளாக வைரமுத்து கூறுவன யாவை ?

59. பாகவதமேள ஆட்டத்தை விவரி.

*அல்லது*

சின்னப்பிள்ளையின் சாதனைகளை விவரி.

60. பூங்குன்றனுக்கும், இளநாகனுக்கும் இடையேயான வழக்கு யாது ?

*அல்லது*

தமிழ் வித்வான்களிடம் பாடம் கேட்க இயலாமைக்கு அந்தணர் கூறும் காரணங்களை எழுதுக.

61. பின்வரும் பகுதியைப் படித்து கேட்கப்பட்ட வினாக்களுக்கு விடை தருக : 4 × 1 = 4

''பருவத்தே பயிர் செய்''; ''இளமையில் கல்'' என்பன ஆன்றோரின் அமுத மொழிகள்.

இளமைப் பருவத்தில் ஒருவன் தவறாமல் கல்வியைக் கற்றுத் தேற வேண்டும். இளமையில் கற்கும் கல்வி உரிய காலத்தில் செய்யும் பயிரைப் போன்றது. இளமையில் கல்வியைப் பெற்றவர் தம் வாழ்வில் பெரும்பயன் அடைவது திண்ணம்.

*வினாக்கள் :*

1. ஆன்றோரின் அமுத மொழிகள் யாவை ?
2. இளமைப்பருவத்தில் ஒருவன் என்ன செய்ய வேண்டும் ?
3. இளமையில் கற்கும் கல்வி எதைப் போன்றது ?
4. இளமையில் கல்வி கற்றவர் எதை அடைவது திண்ணம் ?

*விடைகள் :*

1.

2.

3.

4.

62. பின்வருவனவற்றுள் ஏதேனும் ஒன்று குறித்துக் கட்டுரை வரைக : 1 × 5 = 5

i) இளைஞரும் கைபேசியும்

ii) போக்குவரத்துப் பெருக்கம்

iii) பொங்கல் விழா.

63. உன் தெருவில் அகற்றப்படாமல் குவிந்து கிடக்கும் குப்பைகளை அகற்றக் கோரி பெங்களூர் மாநகரமன்ற ஆணையருக்கு விண்ணப்பம் ஒன்று வரைக. 5

*அல்லது*

உன் பள்ளியில் நடைபெற்ற ஆண்டு விழா நிகழ்ச்சிகளை விளக்கி உன் நண்பனுக்கு / தோழிக்கு மடல் ஒன்று வரைக.